புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
UGC Approved Journals
ISSN: 2456-821X
Vol:07, Issue: 02 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது மே 2023 – வெளியிடப்பட்டது ஜூன் 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS
June-2023

# வெண்குடைக்கீழ் செங்கோலோச்சி கொடுங்கோல் அஞ்சிய அரைசர்

*முனைவர் க. மோகன்காந்தி,*
*தமிழ் உதவிப் பேராசிரியர்*
*தூய நெஞ்சக் கல்லூரி(தன்னாட்சி),*
*திருப்பத்தூர் – 635 601, திருப்பத்தூர் மாவட்டம்.*

*திரு. பெ. வெங்கடேசன்,*
*மேனாள் இயக்குநர்,*
*கல்வெட்டியல் துறை,*
*இந்திய தொல்லியல் துறை, மைசூர்.*

*முன்னுரை*

*தமிழரசர்களின் மெய்க்கீர்த்திகளில் குறிப்பாகப் பிற்காலச் சோழ மன்னர்களின் கல்வெட்டுகளில் அறநெறித் தவறா நல்லாட்சி செய்திட செங்கோலைக் குறியீடாகக் குறிப்பிடுகிறார்கள். வேத வழக்குப்படி நாம் கலி காலத்தில் வாழ்கிறோம். கலி காலம் என்பது மனிதர்கள் அறத்தை மீறி வாழும் காலமாகத் தொன்மத்தின் வாயிலாக அறியலாம். இத்தகைய கலி காலத்தில் கூட மக்களை அறநெறி வழுவாமல் வாழ வைப்பது வேந்தர்களின் கடமை என்பதை வெண்குடைக்கீழ் செங்கோல் ஓச்சி கருங்கலி கடிந்து என ராஜதிராஜன் கல்வெட்டு எடுத்துரைக்கிறது. தமிழகத்தை ஆண்ட முப்பெரும் வேந்தர்களான சேர, சோழ பாண்டியர்களிடம் செங்கோல், வெண்கொற்றக்குடை, ஓங்கு எழில் முடி (தலைக்கிரீடம்) ஆகியவை முதன்மை அடையாளங்களாய்த் திகழ்ந்துள்ளன.*

*செம்மை+கோல்=செங்கோல். பல சிறப்புகள் பொருந்திய கோல் எனலாம். இக்கோல் நீதி வழங்கும் போது யாருக்காகவும் வளையக் கூடாது. தம் கீழ் வாழும் மக்களை நன்னெறிப்படுத்தவும், தவறிழைத்தோரைத் தண்டிக்கவும், மக்கள் நன்னெறியில் வாழவும் செங்கோலே முதன்மையானது. மேலும் அந்தணர் போற்றும் மறைநூலுக்கும் மற்றும் பிற அற நூல்களுக்கும் அடிப்படையாக நிற்பது மன்னவனின் செங்கோலே என்று செங்கோலின் சிறப்புகளை வள்ளுவப் பெருந்தகை செங்கோன்மை எனும் அதிகாரத்தில் முழுமையாகப் பேசுகிறார்.*

*பழங்கால ஆட்சி முறை*

*மக்களுக்கு நெல்லும் உயிரில்லை, நீரும் உயிரில்லை மன்னனின் செங்கோல் ஆட்சியே உயிர் போன்றது என்று புறநானூற்றுப் பாடல்(186) ஒன்றில் மோசிகீரனார் பதிவு செய்கிறார்.*

*புறநானூற்று 72 ஆம் பாடலானது செங்கோல், வெண்கொற்றக் குடையின் உச்சநிலைச் சிறப்பை வெளிப்படுத்துகிறது. தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டிய நெடுஞ்செழியன் என்னும் மன்னனின் சூளுரை, தமிழர் அரசாட்சி மரபின் தத்துவத்தை வெளிப்படுத்துகிறது. சேர, சோழர், ஐந்து வேளிர் என ஏழு பேர் பாண்டியனை இகழ, அவன் ஒரு வஞ்சினத்தை (சபதம்) எடுக்கிறான். என்னை இகழ்ந்த எழுவரையும் வெல்வேன் இல்லையெனில் என் வெண்கொற்றக் குடையின் நிழலில் வாழக் கூடிய மக்கள், நிழல் தராத கொடியவன் எம் வேந்தன் என்று என்னை இகழட்டும் என்கின்றான். மேலும் என் குடிமக்கள் பழிதூற்றும் கொடுங்கோலன் எம் மன்னன் என்று என்னை இகழட்டும் என்கிறான். இங்கு நல்லாட்சி செய்யக் கூடிய மன்னனின் வெண்கொற்றக்குடை மக்களுக்கு நிழலையும், அவன் செங்கோல் வளையாமல் நேராக நின்று எவ்வித விருப்பு, வெறுப்பின்றி நடுநிலையோடு செயலாற்ற வேண்டும் என்ற கருத்தையும் முன் வைக்கிறது.*

*செங்கோல் வழுவா நல்லாட்சிப் புரிதல் என்பது முடியாட்சிக்கு மட்டுமல்லாமல் குடியாட்சிக்கும் தேவையான ஒன்று, இன்றைக்கு நாம் குடியாட்சி முறையில் வாழ்ந்தாலும் முடியாட்சித் தத்துவங்கள் பலவற்றை உள்வாங்க வேண்டியுள்ளது. ஊழல், கையூட்டு,*

*நேர்மையின்மை, அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்துதல், தவறான நீதி வழங்கல் உள்ளிட்டப் பல குற்றச்சாட்டுகள் சில அரசியல்வாதிகள், அரசு அலுவலர்கள், வணிகர்கள் உள்ளிட்டோர் மீது வைக்கப்படுவதைக் காணலாம். எத்தொழில் செய்வோரும் நேர்மையோடு நடக்க வேண்டியது அவசியம் என்பதை உணர வேண்டும்.*

*இதற்குச் சான்றாகப் பாண்டிய நெடுஞ்செழியனின் வரலாறு முதன்மையாய் நிற்கிறது. பாண்டிய நெடுஞ்செழியனின் கவனக் குறைவால் கோவலனுக்குத் தவறானத் தீர்ப்பு வழங்கப்பட்டுக் கொல்லப்படுகிறான். பாண்டிய நாட்டின் குடிமகளாய் இல்லாத கண்ணகி நாடு கடந்து தன் பக்க நியாயத்தைத் தனக்காகத் தானே வழக்கைக் கையில் எடுத்து, தமிழகத்தின் முதல் வழக்குரைஞராய் வாதிடுகிறாள்.*

*வாதத்தின் முதல் சொல்லே "தேரா மன்னா" என்று விளிக்கிறாள். பாண்டிய நாடு அவளுக்குச் சொந்த நாடல்ல தான் எதிர்த்து வழக்குத் தொடுக்கும் நபர் சராசரி நபரும் அல்ல. ஒரு வேந்தனை எதிர்த்து, ஆராய்ந்து செயல்படும் ஆற்றல் இல்லாத மன்னனே என்று வழக்குரைக்கிறாள்.*

*அவளின் வாதத்தைக் கேட்ட பாணடியன், கள்வனைக் கொல்வது கொடுங்கோல் அல்ல செங்கோலே என்ற தன் பக்க நீதியை வெளிப்படுத்துகிறான். (பெருங் குற்றம் புரிவோரைக் கொல்வது என்பது இன்று வரை இருக்கும் சட்ட திட்டமாகும்.)*

*பின்னர் கண்ணகி பக்கம் உள்ள நீதி நிலைநாட்டப்பட்டதை உணர்ந்த பாண்டியன், தான் நீதி தவறிய காரணத்தினால் அரசாட்சியைத் துறப்பது மட்டுமல்லாமல், தன் இன்னுயிரையே நீத்து செங்கோலுக்கும், வெண்கொற்றக் குடைக்கும் சிறப்பு சேர்க்கிறான்.*

*"தாழ்ந்த குடையன் தளர்ந்த செங்கோலன்*
*பொன்செய் கொல்லன் தன்சொற் கேட்ட*
*யானோ அரசன் யானே கள்வன்*
*மன்பதை காக்குந் தென்புலங் காவல்*
*என்முதற் பிழைத்தது கெடுகவென் ஆயுள்"*

*-சிலம்பு, வழக்குரைகாதை 73-77*

*என்னும் பாடலடிகள் உலக அரசியலுக்கே வழிகாட்டியாய் நிற்கிறது. மன்னனே தவறிழைத்தாலும் தவறு தவறே என்பதை தமிழர் நீதி, முன் வைக்கிறது.*

*அறங்கூறும் அவையம், எண்பேராயம் உள்ளிட்டவை சான்றோர் அடங்கிய குழுக்களாகும். மன்னன் சிறந்த கல்வியாளர்களை இக்குழுவில் வைத்து நீதி வழங்குவது மரபு. ஆனால் தீர்ப்புக்குத் தொடர்பே இல்லாத பொற்கொல்லனின் சொல்லைக் கேட்ட நானா அரசன். இல்லை இல்லை நானே குற்றம் உடையவன் என்று கூறி, தன் உயிரை நீத்தான் பாண்டியன். நெடுங்காலமாய்த் தென்னாட்டை ஆட்சி புரியும் பாண்டிய குலத்தின் பெருமை என்னோடு முடிவுக்கு வந்தது. என் வெண் கொற்றக் குடை தாழ்ந்து போனது. நல்லாட்சியின் அடையாளமாய் நிற்கும் என் செங்கோல் வளைந்து போனது என்று கூறி அவன் உயிர் துறந்ததோடு அவன் மனைவி கோப்பெருந்தேவியும் உயிர் துறந்தாள் என்கிறது சிலப்பதிகாரம்.*

*வல்வினை வளைத்த கோலை மன்னவன்*
*செல்லுயிர் நிமிர்த்துச் செங்கோ லாக்கியது*
*மழைவளங் கரப்பின் வான்பே ரச்சம்*
*பிழையுயி ரெய்திற் பெரும்பே ரச்சம்*
*குடிபுர வுண்டுங் கொடுங்கோ லஞ்சி*
*மன்பதை காக்கும் நன்குடிப் பிறத்தல் – காட்சிக்காதை 98-103*

*என்று சிலப்பதிகாரம் காட்சிக்காதையில் வெளிப்படுத்துகிறது. இங்குப் பாண்டியன் நீதி தவறியதால் செங்கோல் வளைந்தது. வளைந்த செங்கோலைத் தன் உயிரை மாய்த்து நிமிர்த்தினான் என இளங்கோவடிகள் எடுத்துரைக்கிறார்.*

*நேர்மையான மன்னர்கள் செங்கோல் தவறினால் அவர்கள் அரசாட்சியையும் உயிரையும் துறப்பர் என்பதை சிலப்பதிகாரம் முன் வைக்கிறது. அரச குடியில் பிறந்த அரசாளக் கூடியவர்கள் கொடுங்கோலுக்கு அஞ்சி நடத்தல் வேண்டும். தன் குடிகள் துன்பப்படுவார்களே மன்னன் பேரச்சம் கொள்ள வேண்டும். மக்கள் வருந்தினால் கொடுங்கோலன் நாட்டில் மழைவளம் பொய்க்கும் எனவே செங்கோல் ஆட்சி செய்ய வேண்டும் என்ற சிலப்பதிகாரக் கூற்று எதிர்காலத்து அரசியலுக்கும் பொருந்தும்.*

சங்க காலத்தில் சோழர் குலத்தைச் சேர்ந்த பல சிறந்த அரசர்கள் தமிழகத்தை நல்லாட்சி புரிந்துள்ளனர். அவர்களில் ஒருவன் சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் என்ற மன்னன். இடைக்காடனார் எனும் நல்லிசைப் புலவர், இம்மன்னன் மிகச்சிறந்த நிருவாக ஆற்றலுடன் மக்களைத் தம் பிள்ளைகள் போல் துன்பம் ஏதும் வாராது காத்தான் என்கிறார். புலி தன் குட்டிகளைப் பாதுகாத்தல் போல, மக்களை உன் செங்கோலால் பாதுகாக்கிறாய் என்கிறார் புலவர். குட்டியீன்ற அனைத்து உயிர்களும் தம் குட்டிகளை பாதுகாப்பது இயல்பே. ஏன் புலியைப் புலவர் சோழனுக்கு உவமையாக்குகிறார் என்றால், புலி மிக்க வீரமுடையது. பகைவர்களிடம் இருந்து புலி போல மக்களைக் காத்து, மக்களுக்கு எந்த தீங்கும் நேராமல் செங்கோல் செலுத்தி நல்லாட்சி புரிந்தான் என்பது மன்னனின் வீரம் சார்ந்த அரசியல் மாண்பைக் காட்டுகிறது.

”புலிபுறங் காக்கும் குருளை போல
மெலிவில் செங்கோல் புறங் காப்ப”

- புறம் – 42:10-11

என்னும் பாடலடிகள் மன்னன் – மக்கள் உறவுநிலையை வெளிப்படுத்துகிறது.

## முடிவுரை

தமிழகத்தை ஆண்ட மிக்க வலிமையுடைய அரசர்களுக்கு உரியவையாக உலகின் முதல் இலக்கண நூலாகக் கருதப்படும் தொல்காப்பியமும் செங்கோலை முதன்மைப்படுத்துகிறது. படை, கொடி, குடை, முரசு, குதிரை, களிறு, தேர், மாலை இவற்றோடு செங்கோலும் அரசர்களுக்குரியது என்கிறார் தொல்காப்பியர்.

கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி (புறம் 182) தம் கருத்தாகத் நீதி தவறாதோர் ஒரு செயலால் பழி வரும் என்றால் உலகத்தையே தந்தாலும் ஏற்க மாட்டார்கள். புகழ் வரும் செயல் என்றால் அதற்காகத் தம் உயிரையும் தருவார்கள் என்ற கருத்து இங்கு மிகவும் பொருந்தும்.

செங்கோல் இன்றைக்கு வள்ளுவர் கூற்றுப்படி சமன் செய்து சீர்தூக்கும் கோலாகக் கண்கள் கட்டப்பட்ட நீதிதேவதையின் கைகளில் தவழ்வதைக் காணலாம். மக்களின் வாழ்வியல் உயர்வுக்கு பண்டைய காலச் செங்கோலும், இன்றைய நடுநிலைத் தவறாத எடைத் தராசும் அமையட்டும் என்பதே அனைவரின் எதிர்பார்ப்பும்.

## ஆய்வுக்குத் துணைநின்ற நூல்கள்


1. ஔவை சு. துரைசாமிப்பிள்ளை, புறநானூறு மூலமும் உரையும், திருநெல்வேலி, தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, ஆண்டு 2007
2. வேங்கடசாமி நாட்டார்.ந.மு, சிலப்பதிகார உரை, முல்லை நிலையம், சென்னை, ஆண்டு 2010


********* ********* ********** ********* ********* ********** ********** **********